# திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர்: திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,

ந.க.எண்.31535/2017/டி4

நாள்:12.12.2019

பொருள்: **ஈட்டுநிலம்** - திண்டுக்கல் மாவட்டம் - நத்தம் வட்டம் - செந்துறை கிராமம் - புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50 ஹெக்டேர்ஸ் அரசுபுறம்போக்கு- தீர்வை ஏற்படாத தரிசு என வகைபாடு செய்யப்பட்ட நிலத்தில் 03.36.00 ஹெக்டேர்ஸ் நிலம் - எல்.மலையூருக்கு சாலை அமைக்கும் பொருட்டு வனத்துறைக்கு சொந்தமான பெருமலை காப்புக்காட்டில் 01.68.00 ஹெக்டேர்ஸ் வன நிலம் பெறுவதற்கு இரண்டு மடங்கு ஈட்டு நிலமாக வழங்கி ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:1)திண்டுக்கல் மாவட்ட வன அலுவலர் கடிதம் ந.க.எண்:4581/2017/வ1, நாள்:28.09.2017.

2)திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நே.மு.க.எண்:31535/2017/டி4, நாள்:03.11.2017.

3)இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.31535/2017/டி4, நாள்:29.11.2017 மற்றும் தொடர் நினைவூட்டுகள் கடைசியாக 23.05.2019.

4)நத்தம் வட்டாட்சியரின் அறிக்கை ந.க.எண்.2525/2019/ஆ2, நாள்: 05.08.2019.

5)திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை ந.க.எண். 6567/2019/ஆ1, நாள்:25.09.2019.

6)திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் புலத்தணிக்கை குறிப்பு, நாள்:05.11.2019.

7)தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**ஆணைகள்:**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், லிங்கவாடி கிராமம், எல்.மலையூருக்கு சாலை அமைக்கும் பொருட்டு வனத்துறைக்கு சொந்தமான நிலத்தில் பெருமலை காப்புக்காட்டில் 1.68.0 ஹெக்டேர்ஸ் வன நிலம் பெறுவதற்கு இரண்டு மடங்கு வருவாய்த்துறை நிலம் ஈட்டு நிலமாக வழங்க பார்வை-1-ல் காணும் திண்டுக்கல் மாவட்ட வன அலுவலரால் கோரப்பட்டது. அதன்பேரில், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், அய்யலூர் இடைபடு காடுகள் கோட்டத்திற்கு அருகிலும் மற்றும் நத்தம் வட்டத்தில் முடிமலை/கோடாங்கி பாதுகாக்கப்பட்ட வன நிலங்களுக்கு அருகிலும் ஈட்டுநிலம் வழங்க தகுதியான அரசுப்புறம்போக்கு நிலங்கள் குறித்து புலத்தணிக்கை செய்தும், உரிய ஈட்டு நிலம் தொடர்பான முன்மொழிவினை அனுப்ப திண்டுக்கல் கிழக்கு மற்றும் நத்தம் வட்டாட்சியர் ஆகியோர்களைக் கோரப்பட்டது. இந்நேர்வில், திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், லிங்கவாடி கிராமம், எல்.மலையூருக்கு சாலை அமைக்கும் பொருட்டு வனத்துறைக்கு சொந்தமான பெருமலை காப்புக்காட்டில் 1.68.0 ஹெக்டேர்ஸ் வன நிலம் பெறுவதற்கு ஈட்டு நிலமாக (Compensatory Afforestation Land) நத்தம் வட்டம், செந்துறை கிராமம், புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50

ஹெக்டேர்ஸ் அரசுப்புறம்புகல்-தீர்வை ஏற்படாத தரிசு" என்ற வகைப்பாட்டில் குறிப்பு கலத்தில் "பாறை" என தாக்கலாகியுள்ள நிலத்தில் இரண்டு மடங்கு ஈட்டுநிலமாக அதாவது 1.68 ஹெக்டேர்ஸ் நிலம் எடுப்பதற்கு 3.36.00 ஹெக்டேர்ஸ் நிலத்தினை ஈட்டு நிலமாக வழங்கலாம் என பரிந்துரை செய்து உரிய ஈட்டு நிலம்தொடர்பான முன்மொழிவுகள் பார்வை-4 மற்றும் 5-ல் காணும் குறிப்புகளின்படி நத்தம் வட்டாட்சியர் மற்றும் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து வரப்பெற்றுள்ளது. அதன்பேரில், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் ஈட்டுநிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலம் புலத்தணிக்கை செய்யப்பட்டு பார்வை-6-ல் காணும் குறிப்பின்படி புலத்தணிக்கை குறிப்பு வரப்பெற்றுள்ளது.

<u>நிலத்தின் அமைவிடம்:</u>

ஈட்டுநிலம் வழங்க செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இடமானது நத்தம் வட்டம், குடகிபட்டியிலிருந்து சுமார் 2.0 கி.மீ தொலைவில் கருத்தநாயக்கன்பட்டிக்கு செல்லும் சாலையின் இடதுபுறம் முடிமலை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியினையொட்டி அமைந்துள்ளது.

<u>நிலத்தின் வகைப்பாடு:</u>

நத்தம் வட்டம், செந்துறை கிராமம், புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50 ஹெக்டேர்ஸ் நிலம் "அரசுப்புறம்புகல்-தீர்வை ஏற்படாத தரிசு" என்ற வகைப்பாடு செய்யப்பட்டு கிராமக்கணக்குகளில் கீழ்க்கண்டவாறு வகைபாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் 03.36.00 ஹெக்டேர்ஸ் நிலத்தினை எல்.மலையூருக்கு சாலை அமைக்கும் பொருட்டு கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ஈட்டு நிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | புல எண் | மொத்தப் பரப்பு (ஹெக்) | வகைபாடு | அ-பதிவேடு கலம்-12-ல் உள்ள குறிப்புகள் | ஈட்டுநிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள பரப்பு (ஹெக்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1154 | 17.41.50 | அரசு புறம்போக்கு-தீர்வை ஏற்படாத தரிசு | பாறை | 03.36.00 |

<u>ஈட்டுநிலம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள புலத்தின் நான்குமால் விவரம் பின்வருமாறு:</u>

- வடக்கு : புல எண்.1154 தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தின் பகுதி.
- தெற்கு : புல எண்கள்: 1145/1- பட்டா நிலம்.
- கிழக்கு : புல எண்.1154 தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தின் பகுதி.
- மேற்கு : முடிமலை பாதுகாக்கப்பட்ட வனநிலம்.

<u>மரங்கள், கட்டிடங்கள் மற்றும் நிலையான அமைப்புகள்:</u>

வனத்துறைக்கு ஈட்டுநிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடமானது நத்தம் வட்டம், குடகிபட்டியிலிருந்து சுமார் 2.0 கி.மீ தொலைவில் கருத்தநாயக்கன்பட்டிக்கு செல்லும் சாலையின் இடதுபுறம் முடிமலை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியினையொட்டியும்,

முடிமலைப்பகுதியின் அடிவாரப் பகுதியாகவும் அமைந்துள்ளது. இதில் விறகு பயன்பட்டிற்கான சிறு மரங்கள் மற்றும் முட்புதர்கள் உள்ளன. விலைமதிப்பு மிகுந்த மரங்கள் ஏதுமில்லை. முடிமலைப்பகுதியிலிருந்து வரும் நீரானது நீரோடை போல் புல எண்.1154-ன் தெற்குப்பகுதியில் மேற்கிலிருந்து கிழக்காக சுமார் 20 அடி தொலைவிற்கு சென்று மீண்டும் வடக்கு நோக்கி செல்கிறது. மேலும் பிரஸ்தாப புலத்தின் வடபுறம் சிறிய குன்று ஒன்று தென்வடலாக சுமார் 170மீ நீளத்தில் சுமார் 80மீ அகலத்தில் அமைந்துள்ளது. ஈட்டுநிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் உயர் மற்றும் தாழ்வழுத்த மின்சாரக் கம்பிகள் எதுவும் செல்லவில்லை. மேலும், பிரஸ்தாப புலத்தில் புராதனச் சின்னங்கள், பொதுஉபயோகத்திலுள்ள கோவில்கள், மசூதி மற்றும் வழிபாட்டுத்தலங்கள் ஏதுமில்லை என்றும், பிரஸ்தாப புலத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை என்றும், வனத்துறைக்கு ஈட்டுநிலமாக வழங்க உகந்த இடமாக உள்ளது என்றும் நத்தம் வட்டாட்சியர் மற்றும் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர்களின் அறிக்கைகளிலும் மற்றும் திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலரின் புலத்தணிக்கை அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆட்சேபணை விவரம் :

நத்தம் வட்டம், செந்துறை கிராமம், புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50 ஹெக்டேர்ஸ் அரசுப்புறம்போக்கு-தீர்வை ஏற்படாத தரிசு என வகைபாடு செய்யப்பட்ட நிலத்தில் 03.36.00 ஹெக்டேர்ஸ் நிலத்தினை வனத்துறையினருக்கு ஈட்டுநிலமாக வழங்குவது தொடர்பாக கடந்த 18.07.2019 முதல் 01.08.2019 வரை செந்துறை கிராமத்தில் அ1-நோட்டீஸ் பிரசுரம் செய்யப்பட்டதில் பொதுமக்களிடமிருந்தோ மற்றும் வேறு நபர்களிடமிருந்தோ ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை. மேற்படி நிலத்தில் எவ்வித ஆக்கிரமிப்புகள் இல்லை. இந்நிலம் தடையாணை புத்தகத்தில் பதிவுகள் செய்யப்படவில்லை.

## உட்பிரிவு

நத்தம் வட்டம், செந்துறை கிராமம், புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50 ஹெக்டேர்ஸ் நிலத்தில் வனத்துறையினருக்கு ஈட்டுநிலமாக 03.36.00 ஹெக்டேர்ஸ் நிலத்தினை வழங்குவதற்காக கீழ்க்கண்டவாறு உத்தேச உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

| உட்பிரிவுக்கு முன் | | | உட்பிரிவிற்கு பின் | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | பரப்பு (ஹெக்) | வகைபாடு | புல எண் | பரப்பு (ஹெக்) | வகைபாடு |
| 1154 | 17.41.50 | அரசுப்புறம்போக்கு - தீர்வை ஏற்படாத தரிசு | 1154/1 | 13.91.50 | அரசுப்புறம்போக்கு - தீர்வை ஏற்படாத தரிசு |
| | | | 1154/2 | 3.36.00 | தமிழ்நாடு அரசு - வனத்துறை |
| | | | மொத்தம் | 17.41.50 | |

## நில மதிப்பு நிர்ணயம் செய்தல்:

நத்தம் வட்டம், செந்துறை கிராமம், புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50 ஹெக்டேர்ஸ் நிலத்தில் 03.36.00 ஹெக்டேர்ஸ் ஈட்டுநிலமாக வழங்கப்படவுள்ள நிலத்தின் நில மதிப்பினை நிர்ணயம் செய்ய அருகிலுள்ள புல எண்.1145-ஆனது மாதிரிப்புலமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மாதிரிப்புலமாக தேர்வு செய்யப்ட்டுள்ள புல எண்.1145-ன் அரசு வழிகாட்டிப் பதிவேட்டின்படி ஒரு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.76,500/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஈட்டுநிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 03.36.00 ஹெக்டேர்ஸ் நிலத்தின் மதிப்பு ரூ.2,57,040/- ஆகும்.

மேலும், திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், செந்துறை கிராமம் புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50 ஹெக்டேர்ஸ் "அரசுப்புறம்புகல்-தீர்வை ஏற்படாத தரிசு" என்ற வகைப்பாட்டில் குறிப்பு கலத்தில் "பாறை" என கிராமக்கணக்கில் தாக்கலாகியுள்ள நிலத்தில் 03.36.00 ஹெக்டேர் நிலத்தினை நிலமதிப்பு மற்றும் இதர கட்டணங்கள் ஏதுமின்றி வனத்துறைக்கு ஈட்டுநிலமாக வழங்கலாம் என நத்தம் வட்டாட்சியர் மற்றும் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் பரிந்துரை செய்துள்ளார்கள்.

திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலரால் 05.11.2019 அன்று புலத்தணிக்கை செய்யப்பட்டு, ஈட்டுநிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நத்தம் வட்டம், செந்துறை கிராமம் புல எண்.1154 அரசுப்புறம்போக்கு-தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தில், விறகு பயன்பாட்டிற்கான சிறு மரங்கள் மற்றும் முட்புதர்கள் உள்ளன என்றும், விலைமதிப்பு மிகுந்த மரங்கள் ஏதுமில்லை என்றும், மேற்படி புலமானது முடிமலை பகுதியின் அடிவாரப்பகுதியாக அமைந்துள்ளது என்றும், வனத்துறையினருக்கு ஈட்டுநிலமாக வழங்க உகந்த நிலமாக உள்ளது என்றும், எனவே, நத்தம் வட்டம், செந்துறை கிராமம் புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50 ஹெக்டேர்ஸ் நிலத்தில் 03.36.00 ஹெக்டேர்ஸ் நிலத்தினை உட்பிரிவு ஆவணங்களில் உள்ளபடி வனத்துறையினருக்கு ஈட்டுநிலமாக வழங்கப்பட உள்ளதால் வருவாய் நிலை ஆணை எண்.23ஏ, மத்திய வனப்பாதுகாப்புச் சட்டம், 1980, பிரிவு-3.2(i) மற்றும் அரசாணை எண்.503, வருவாய் (நி.மு.4-1) துறை, நாள்:21.09.1999-ன்படியும் நிலமதிப்பு மற்றும் இதர கட்டணங்கள் ஏதுமின்றி நிலமாற்றம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

அரசாணை எண்.503, வருவாய்த்(நி.மு.4-1)துறை, நாள்:21.09.1999-ன்படி நீர்நிலைப் புறம்போக்கு போன்ற தடையாணைக்குட்பட்ட நிலங்கள் நீங்கலாக ஏனைய இதர நிலங்களை ஒரு பொதுவான வணிகநோக்கமில்லாத பயன்பாட்டிற்கு நிலமதிப்பு மற்றும் இதர கட்டணங்கள் ஏதுமின்றி கேட்புத்துறையின் தேவைகளுக்கும் தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பினை மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட துறையினரை கலந்தாலோசித்து வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், மத்திய வனப்பாதுகாப்புச் சட்டம், 1980, பிரிவு-3.2(i)-ன்படி வனத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள வனநிலங்களை இதர காரியங்களுக்காக தேவையின் நோக்கம் கருதி கையகப்படுத்தி பயன்படுத்தும்பொழுது கையகப்படுத்தும் நிலங்களுக்கு சரிகட்டும் விதமாக

ஈட்டு நிலமாக இரண்டு மடங்கு நிலங்களையும் மற்றும் அந்நிலங்களில் பசுமைப் போர்வையை அதிகரிக்க தோட்ட உற்பத்தி செலவுத்தொகையையும் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கேட்புத்துறையினரின் கோரிக்கையின்பேரிலும், நத்தம் வட்டாட்சியர் மற்றும் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர்களின் பரிந்துரை அறிக்கையின் பேரிலும் நத்தம் வட்டம், லிங்கவாடி கிராமம், எல்.மலையூருக்கு சாலை அமைக்கும் பொருட்டு வனத்துறைக்கு சொந்தமான பெருமலை காப்புக்காட்டில் 01.68.00 ஹெக்டேர்ஸ் நிலம் பெறுவதற்கு ஈட்டுநிலமாக திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், செந்துரை கிராமம், புல எண்.1154 மொத்தப்பரப்பு 17.41.50 ஹெக்டேர்ஸ் அரசுப்புறம்போக்கு-தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தில் 03.36.00 ஹெக்டேர்ஸ் நிலத்தினை வருவாய் நிலை ஆணை எண்.23ஏ மற்றும் மத்திய வனப்பாதுகாப்புச் சட்டம்-1980, பிரிவு-3.2(i)-ன்படியும் நிலமதிப்பு மற்றும் இதர கட்டணங்கள் ஏதுமின்றி வனத்துறைக்கு ஈட்டுநிலமாக வழங்கி ஆணையிடப்படுகிறது.

மேலும், மேற்படி ஈட்டு நிலமாக வழங்கப்படும் நிலத்தில் பசுமைப் போர்வையை அதிகரிக்க வனத்துறையினரால் நிர்ணயம் செய்யப்படும் தோட்ட உற்பத்தி செலவுத்தொகையினை சம்பந்தப்பட்ட அரசுக்கணக்கில் செலுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள நத்தம் வட்டார வளர்ச்சி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மேலும், ஈட்டுநில உத்தரவினை வட்ட/கிராமக் கணக்குகளில் தக்க மாறுதல் செய்திட அங்கீகரிக்கப்பட்ட உட்பிரிவு ஆவணங்கள் நத்தம் வட்டாட்சியருக்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. வட்ட/கிராமக் கணக்குகளில் தக்க மாறுதல் செய்தும், கேட்புத்துறையினருக்கு நிலத்தை ஒப்படைத்தும், ஒப்படைப்புச்சான்று மற்றும் வட்ட/ கிராமக்கணக்குகளின் நகலுடன் அறிக்கை செய்யுமாறு நத்தம் வட்டாட்சியருக்கு ஆணையிடப்படுகிறது.

ஒம்/-மு.விஜயலட்சுமி,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திண்டுக்கல்.

-/உ.ந.உ.ப/-

13.12.2019
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
மாவட்ட வருவாய் அலுவலர்,
திண்டுக்கல்.

பெறுநர்:

1. மாவட்ட வன அலுவலர்,
   திண்டுக்கல்.
2. வட்டாட்சியர்,
   நத்தம். (அங்கீகரிக்கப்பட்ட உட்பிரிவு ஆவணங்களுடன்)
3. வட்டார வளர்ச்சி அலுவலர்,
   நத்தம்.

நகல்:வருவாய் கோட்டாட்சியர், திண்டுக்கல் (தொடர் நடவடிக்கைக்காக)
நகல்:உதவி இயக்குநர்(ஊராட்சிகள்),திண்டுக்கல் (தொடர் நடவடிக்கைக்காக)
நகல்: டி4, உதவியாளர் (இருப்புக்கோப்புக்கு)

தமிழ்நாடு வனத்துறை

அனுப்புதல்

S.மணிகன்டன்
வனச்சரக அலுவலர்
அய்யலூர் வனச்சரகம்
அய்யலூர்.

பெறுதல்

மாவட்ட வன அலுவலர்
திண்டுக்கல் வனக்கோட்டம்
திண்டுக்கல்.

ந.க.எண்.33/2024 நாள் : 04.05.2024

அய்யா,

பொருள்: ஈட்டு நிலம்- திண்டுக்கல் மாவட்டம்-நத்தம் வட்டம்-செந்துரைகிராமம்-புல எண்:1154 மொத்தப் பரப்பு 17.41.50 ஹெக்டேர் அரசு புறம்போக்கு-தீர்வை ஏற்படாத தரிசு என வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தில் 03.36 ஹெக்டேர் நிலம்-எல்.மலையூர் சாலை அழகர்கோவில் வனச்சரகம்,பெருமலை காப்புக்காட்டில் 1.68 ஹெக்டேர் பரப்பில் அமைக்கும் பொருட்டு வனத்துறைக்கு இரண்டு மடங்கு ஈட்டு நிலம் வழங்கியது-அறிக்கை சமர்ப்பிப்பது - தொடர்பாக.

பார்வை: 1)மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல் வனக் கோட்டம், திண்டுக்கல் - ந.க.எண்.819/2024/வ2. நாள் : 29.04.2024.
2)திருமதி.ம.சுகந்தி,வட்டாட்சியர்,நத்தம்- ந.க.எண்.2525/2019/ஆ2. நாள் : 02.05.2024.

மேற்காண் பார்வை(1) கடிதத்தின்படி, பார்வை(2) கடிதத்தின் மூலம் வட்டாட்சியர், நத்தம் அவர்கள் மேற்படி பொருளில் தெரிவித்துள்ளபடி 03.36 ஹெக்டேர் நிலம் வழங்கப்பட்டமைக்கு நிலஒப்புவிப்புச்சான்று 2 எண்ணம் வழங்கியும்,2 எண்ணம் அவர்கள் எம்மிடமிருந்து பெற்றுக்கொண்டும் **,அ-பதிவேடு நகல்,Toposheet நகல்,FMB நகல் களில் கிராம நிர்வாக அலுவலரால் ஒப்பமிட்டு** அய்யலூர் வனச்சரகத்தில் சமர்ப்பிக்கபட்டமையை **அதன் நகல்களுடன், நிலஒப்புவிப்புச்சான்று (1 எண்ணம்)** அசலுடன் தங்களின் மேலான பார்வைக்கு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

4.5-24

வனச்சரக அலுவலர்
அய்யலூர் வனச்சரகம்
அய்யலூர்.

இணைப்பு:

மேற்கூறியவாறு.

நில ஒப்புவிப்புச்சான்று

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | திண்டுக்கல் |
| வட்டம் | : | நத்தம் |
| கிராமம் | : | செந்துறை கிராமம் |
| புல எண்கள் | : | 1154/ 2 |
| பரப்பு | : | 3.36.00 ஹெக்டேர்ஸ் |
| என்ன காரணத்திற்காக நிலமாற்றம் செய்யப்படுகிறது | : | சாலை வசதிக்காக செந்துறையிலிருந்து வழங்கப்பட்ட நிலத்திற்கு ஈ.டு நிலமாக வழங்கப்பட்டது. |
| திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் | : | ந.க.எண்.31535/2017/டி4, நாள் 12.12.2019. |
| கேட்புத்துறை | : | வனத்துறை |

3.5.24
நிலம் ஒப்படைக்கப்பட்டது
வட்டாட்சியர்
நத்தம்

3.5.24
நிலம் பெற்றுக்கொள்ளப்பட்டது
வனச்சரக அலுவலர்
அய்யலூர் சரகம்
அய்யலூர்.

மாவட்டம்: திண்டுக்கல் 

வட்டம்: நத்தம் கிராமம்:- எண்: 2

தாள் எண் - 95 பெயர்: செந்துறை




| | A | B |
|---|---|---|
| மொத்தம் | - | 14 |

கிராம நிர்வாக அலுவலர்
2, செந்துறை கிராமம்
நத்தம் வட்டம்

வட்டாட்சியர்
நத்தம்

அளவைப்படிவம் எண் 23

மாவட்டம் : திண்டுக்கல் அண்ணா

கிராமம் { எண். : 2. / பெயர். : செந்துறை,

வட்டம் : நத்தம்.

புல எண். : 1154.

பரப்பு : ஹெக்டேர் 17 ஏர். 41-5.




/ஒப்பம்/

கிராம நிர்வாக அலுவலர்
2, செந்துறை கிராமம்
நத்தம்

வட்டாட்சியர்
நத்தம்

அளவு : 1 மி.மீ = 5000 மி.மீ,

Compared by

District:Dindigul Taluk:Natham Village:Senthurai

| புல எண் | உட்பிரிவு எண் | பழைய புல எண் - உட்பிரிவு எண் | பகுதி | அரசு - ரயத்துவாரி | நிலத்தின் வகை | பாசன ஆதாரம் | இரு போகமா | மண் வயனமும் ரகமும் | மண் தரம் | தீர்வை - ஹெக் | | பரப்பு | | மொத்த தீர்வை | | பட்டா எண் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரு | பை | ஹெக் | ஏர் | ரு | பை | | |
| 1150 | 2 | 1150-2 | P | ரயத்துவாரி | புஞ்சை | | 0 | 8 - 1 | 4 | 2 | 77 | 0 | 18.00 | 0 | 50 | 4096-சஞ்சீவி | |
| 1150 | 3 | 1150 | P | ரயத்துவாரி | புஞ்சை | | 0 | 8 - 1 | 4 | 2 | 77 | 0 | 22.00 | 0 | 61 | 1791-வெள்ளைகண்ணு | |
| 1150 | 4 | 1150 | P | ரயத்துவாரி | புஞ்சை | | 0 | 8 - 1 | 4 | 2 | 77 | 0 | [illegible] | 2 | 53 | 1345-பொன்னழகு | |
| TOTAL FOR SURVEY NUMBER- 1150 | | | | | | | | | | | | 1 | 84.00 | 5 | 12 | | |
| 1151 | - | 1151 | | அரசு | தரிசு | | 0 | 0 - | 0 | 0 | 00 | 0 | [illegible] | 0 | 00 | | பாறை |
| 1152 | - | 1152 | | அரசு | தரிசு | | 0 | 0 - | 0 | 0 | 00 | 14 | 98.50 | 0 | 00 | | பாறை |
| 1153 | - | 1153 | | அரசு | புஞ்சை | | | 8 - 1 | 4 | 0 | 00 | 13 | 82.50 | 0 | 00 | | தரசு.புஸ்திதி பாதை |
| | | | | | | | | | | | | 14 | 05.50 | | | | |
| 1154 | - | 1154 | | அரசு | தரிசு | | 0 | 0 - | 0 | 0 | 00 | 17 | 41.50 | 0 | 00 | | பாறை |
| 1155 | - | 1155 | | அரசு | புஞ்சை | | | 8 - 1 | 4 | 0 | 00 | 0 | [illegible] | 0 | 00 | | தரசு.புஸ்திதி பாதை |
| 1156 | - | 1156 | | அரசு | புஞ்சை | | | 8 - 1 | 4 | 0 | 00 | 0 | 71.50 | 0 | 00 | | தரசு.புஸ்திதி பாதை |
| 1157 | - | 1157 | | அரசு | புஞ்சை | | | 8 - 1 | 4 | 0 | 00 | 0 | 68.00 | 0 | 00 | | தரசு.புஸ்திதி பாதை |
| 1158 | - | 1158 | P | ரயத்துவாரி | புஞ்சை | | | 8 - 1 | 4 | 2 | 77 | 2 | 22.50 | 6 | [illegible] | 2103-அழகன் மற்றும் 1 நபர்(கள்) | |
| 1159 | - | 1159 | | அரசு | புஞ்சை | | | 8 - 1 | 4 | 0 | 00 | 0 | 59.50 | 0 | [illegible] | | தரசு.புஸ்திதி பாதை |
| 1161 | - | 1161 | | அரசு | தரிசு | | 0 | 0 - | 0 | 0 | 00 | 6 | 75.50 | 0 | [illegible] | | தீ.வி.படாதரசு. புஞ்சை |
| 1162 | - | 1162 | | அரசு | புறம்போக்கு | | | 0 - | 0 | 0 | 00 | 0 | 35.50 | 1 | 00 | | வாரி, ஓடை |
| 1163 | | 1163 | | அரசு | புறம்போக்கு | | 0 | 0 - | 0 | 0 | 00 | 1 | 16.50 | 0 | 00 | | தீ.வி.பட்டதரசு. புஞ்சை |
| 1164 | | 1164 | | அரசு | தரிசு | | 0 | 0 - | 0 | 0 | 00 | 10 | 79.50 | 0 | 00 | | பாறை |
| 1165 | - | 1165 | | அரசு | தரிசு | | 0 | 0 - | 0 | 0 | 00 | 2 | 81.50 | 0 | 00 | | பாறை |
| 1166 | 1 | 1166-1 | | அரசு | புஞ்சை | | | 8 - 1 | 4 | 0 | 00 | 0 | 54.00 | 0 | 00 | | தரசு.புஸ்திதி பாதை |
| 1166 | 2A | 1166-2 | | ரயத்துவாரி | புஞ்சை | | 0 | 8 - 1 | 4 | 2 | 77 | 1 | 47.50 | 4 | 10 | 3824-பாலமுருகன் | |
| 1166 | 2B | 1166-2 | | ரயத்துவாரி | புஞ்சை | | 0 | 8 - 1 | 4 | 2 | 77 | 0 | 40.50 | 1 | 12 | 3643-பிரபாகரன் மற்றும் 2 நபர்(கள்) | |

வட்டாட்சியர் நத்தம்

கிராம நிர்வாக அலுவலர்
2, செந்துரை கிராமம்
நத்தம் வட்டம்
2?-03-20..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1154/1 | – | 1154 மா | [illegible] | 0....0.00 | 14.05.50 |
| 2 | – | 11 | [illegible] | 0....0.00 | 03.36.00 |
| | | | | | 17.41.50 |

T KDA/571/1429

/உண்மைநகல்/

வட்டாட்சியர்
நத்தம்

கிராம நிர்வாக அலுவலர்
2, செந்துறை கிராமம்
நத்தம் வட்டம்

1433 – ஆம் பசலியில் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டம் செந்துறை 2. கிராமக் கணக்கு

| நில வரித் திட்டத்தின்படி புலன்களின் விபரம். | | | | | கைப்பற்று தாரருடைய பெயரும் எண்ணும் அல்லது அனுபோக தாரருடைய பெயர். | சாகுபடியாளரின் பெயர். | முதல் போகம். | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நில அளவை எண். | உட்பிரிவு எண். | பரப்பு. | தீர்வை. | ஒரு போகம் அல்லது இரு போகம். | | நிலத்தின் எந்த பகுதி யாவது சாகுபடியாளரால் பயிரிடப்பட்டுள்ளதா. | எந்த மாதத்தில் பயிர் செய்யப்பட்டது எந்த மாதத்தில் அறுவடை செய்யப்பட்டது. | பயிரின் பெயர். | பயிரான / அறுவடையான பரப்பு. | உண்மையான பாய்ச்சல் ஆதாரம். | விளைச்சல் அளவு விழுக்காடு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 1154 | 2 | 3.360 | – | – | – | | | – | | | |

| இரண்டாம் போகம். | | | | | | கீழ்க்கண்டவகையில் பயிரிடப்படாது உள்ள நிலத்தின் தன்மை மற்றும் பரப்பின் விவரங்கள் ஒவ்வொரு நில அளவை எண் அல்லது அதன் பகுதியில். | |
|---|---|---|---|---|---|---|---|
| எந்த மாதத்தில் பயிர் செய்யப்பட்டது எந்த மாதத்தில் அறுவடை செய்யப்பட்டது. | பயிரின் பெயர். | பயிரான / அறுவடையான பரப்பு. | உண்மையான பாய்ச்சல் ஆதாரம். | விளைச்சல் அளவு விழுக்காடு. | கிராம அலுவலரின் குறிப்புரை :– (1) புலன்களின் பகுதிகளில் மட்டும் பயிரிடப்பட்ட இனங்களில் விருக்கள் அளவில். (2) கைப்பற்றில் இல்லாத நிலங்களின் சாகுபடியின் பரப்பு தன்மையும் (3) முந்தைய மாதத்தில் பாய்ச்சல் உதவியின்றி பயிரிடப்பட்டவை என்று பதிவாகியுள்ள நிலங்களுக்கு பிந்தைய மாதங்களில் நீர் பாய்ச்சப்பட்ட விவரங்கள். | (அ) வனம், (ஆ) பயனற்ற பயிர் செய்ய இயலாத நிலம், (இ) விவசாயம் மற்றும் இதர காரியங்களுக்கு பயன் படுத்தப் படும் நிலம், (ஈ) பயிரிடத்தக்க தரிசு (உ) நிலையான புல் தரைகளும் மற்றும் இதர மேய்ச்சல் நிலங்களும், (ஊ) விதைக்கப்பட்ட நிகர பரப்பில் சேர்க்கப்படாத மரவகைப் பயிர்களும் தோப்புகளும், (எ) நடப்புத் தரிசுகள் (ஏ) இதர தரிசு நிலங்கள். | பயிர் பார்வையிடும் அலுவலர் குறிப்புரைகள். |
| (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (18அ) | (19) |
| | | | | | [illegible] அரசு வனத்துறை | | |

உள்ளவாறு

கிராம நிர்வாக அலுவலர்
2, செந்துறை கிராமம்
நத்தம் வட்டம்

வட்டாட்சியர்
நத்தம்

380/ 1–R.F. III-A-10–20,00,000 Cps.-GBP.-MDU.-7–2023.




ASSISTANT ENGINEER (RD)
NATHAM




ASSISTANT ENGINEER (RD)
NATHAM




ASSISTANT ENGINEER (RD)
NATHAM




ASSISTANT ENGINEER (RD)
NATHAM




ASSISTANT ENGINEER (RD)
NATHAM